## ஏழாம் வகுப்பு தமிழ் தேர்வு - 3

1. மணிபல்லவத் தீவின் இளவரசி நாககன்னிகைக்கும் சோழ இளவரசன் ஒருவனுக்கும் பிறந்த வழித்தோன்றல்
[A] சேரர்கள் [B] சோழர்கள்
[C] பாண்டியர்கள் [D] பல்லவர்கள்

2. “முதலாம் மகேந்திரவர்மன்“ பற்றி சரியானது
I. அப்பரால் சைவ சமயம் வந்தடைந்தான்
II. திருவதியில் சிவாலயத்தை கட்டினான்
III. குடைவரைக் கோயில்கள் அமைப்பதில் சிறந்தவன்
IV. "மாமல்லன்" மண்டகப்பட்டு கல்வெட்டு கூறுகிறது
[A] I,II,III,IV [B] I, II, III
[C] I, IV [D] I, III, IV

3. பல்லவர்கால குடைவரைக் கோயில்கள் அல்லாதது
[A] திருச்சிராப்பள்ளி [B] மகேந்திரவாடி
[C] பல்லாவரம் [D] தஞ்சாவூர்

4. நாயன்மார்கள் இயற்றிய தேவாரமும், ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்வியபிரபந்தமும் எக்காலத்தில் தோன்றியது ______
[A] நாயக்கர்காலம் [B] பாண்டியர்கள்
[C] சோழர்காலம் [D] பல்லவர்காலம்

5. "கடுவன் புல்லிக் களவர் கோமான்" என்று களப்பிரர்களை பற்றி கூறும் நூல் ______
[A] மத்தவிலாசம் [B] அகநானூறு
[C] புறநானூறு [D] மணிமேகலை

6. "திருமந்திரம்" பற்றி உங்கள் கருத்து என்ன ?
I. சைவத்தின் முதல் தத்துவ நூலாக கருதப்படுகிறது
II. நாவுக்கரசருக்கு முற்பட்டவர் என வரலாறு கூறுகிறது
III. ஒன்பது தந்திரங்களாக பகுக்கப்பட்டுள்ளது
IV. மூன்றாயிரம் பாடல்கள் பத்தாவது திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது எது / எவை சரியெனத்தேர்க
[A] I, III, IV [B] I, II, III
[C] II, III, IV [D] I, II, III, IV

7. “முதல் உலா” - நூல் "திருக்கயிலாய ஞான உலா" எந்த திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது ______
[A] 9 [B] 11
[C] 12 [D] 10

8. “யவணர் தந்த விளைமாண் நன்கலம் பொன்னொடு வந்து கரியோடு பெயரும்” ______
[A] புறநானூறு [B] அகநானூறு
[C] பரிபாடல் [D] பட்டினப்பாலை

9. "பழம் மரபிசைக் களஞ்சியம்" என்று யாருடைய தேவாரத்தை அழைக்கப்படுகிறது ______
[A] 1,2,3 திருஞானசம்மந்தர் தேவாரம்
[B] 4,5,6 திருநாவுக்கரசர் தேவாரம்
[C] 7, சுந்தரர் தேவாரம்
[D] 8, மாணிக்கவாசகர் பக்தி பாடல்கள்

10. சம்மந்தர் பாடல்களுக்கு ஏற்ப யாழ் வாசித்தவர் ______
[A] திரு நீலகண்ட யாழ்பாணர்
[B] திருப்பாணாழ்வார்
[C] குலசேகராழ்வார்
[D] திருமங்கையாழ்வார்

11. தமிழில் நாட்டுப்புறப்பாடல் வடிவங்களைப் பெரிதும் கொண்டமைந்த பழைய பனுவல் ______
[A] திருமுருகாற்றுப்படை [B] பட்டினப்பாலை
[C] சிறுபாணாற்றுப்படை [D] திருவாசகம்

12. என் கடன் பணி செய்து கிடப்பதே - கொள்கை ______
[A] சம்மந்தர் [B] அப்பர்
[C] சுந்தரர் [D] மாணிக்கவாசகர்

13. பன்னிரு திருமுறைகளைப் படைத்தவர்கள் எத்தனைபேர்
[A] 4 [B] 9
[C] 3 [D] 27

14. சுந்தரர் 'தேவாரம்' பின்வருவனவற்றுள் எது/எவை சரி
I. சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறை 'திருப்பாட்டு' எனவும் அழைப்பதுண்டு
II. இவர் பாடல்களில் எளிமை, நகைச்சுவை, இயற்க்கை வர்ணனை ஆகியன மிளிரும்
III. ஆறுகள், கோயில் பண்டாரங்கள், இசை, நடனம், ஆகிய குறிப்புகளை இவர் பாடல்களில் காண முடியும்
IV. தம்பிரான் தோழர், வன்தொண்டர்,வாதவூரார்,சேரமான் தோழர், சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுகிறது
[A] I,II,III,IV [B] I, III, IV
[C] II, III, IV [D] I, II, III

15. முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் !
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள் !
பின்வருவனவற்றுள் சரியான இயைபு தேர்க
[A] முன்னம் - மூர்த்தி
[B] நாமம் - வண்ணம்
[C] கேட்டாள் - கேட்டாள்
[D] அவன் - அவனுடைய

ARIVU TRUST

16. "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று சிவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க வாதவூரார் பாடியது ______
[A] திருவாசகம் [B] திருக்கோவை
[C] செந்தமிழ்பதிகம் [D] எதுவுமில்லை

17. 96 - வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றான கோவை வகையை முதலில் தோற்றுவித்தவர் ______
[A] மீனாட்சி சுந்தரம் [B] இரட்டையர்கள்
[C] குமரகுருபரர் [D] மாணிக்கவாசகர்

18. பரவை என்னுமென் காதலிக்கும் எனக்கும் பற்றாக உள்ள பெருமானே - என்று சுந்தரர் யாரை பெருமானே என்று குறிப்பிடுகிறார் ______
[A] சம்மந்தர் [B] சிவபெருமான்
[C] பாண்டியன் [D] பெருமாள்நாயனார்

19. திருமந்திரத்தில் இடம்பெறாத ஒன்றைத் தேர்க !
[A] உள்ளம் பெருங் கோயில் ஊன் உடம்பு ஆலயம்
[B] நான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்
[C] என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே
[D] சத்தினி பாதம் ஒத்திடுங் காலத்துச் சுத்த சற்குரு

20. "பிரபந்த மாலை" - என்று அழைக்கப்படுவது
[A] பதினோராம் திருமுறை
[B] திருமந்திரம்
[C] நாலாயிர திவ்விய பிரபந்தம்
[D] அற்புத திருவந்தாதி

21. "இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டவர்"
[A] ஆண்டாள் [B] ஔவையார்
[C] அதிராஅடிகள் [D] புனிதவதியார்

22. 11 - ஆம் திருமுறையில் உள்ள பாடல்களை ஒழுங்குபடுத்தியவர் யார் ? ______
[A] நம்பியாண்டார் நம்பி [B] ஆழ்வார்கள்
[C] ராசராசன் [D] சேக்கிழார்

23. "நாலாயிர திவ்விய பிரபந்தம்" - உள்ள பிரபந்தங்கள் எத்தனை உள்ளது ______
[A] 9 [B] 4000
[C] 24 [D] 4

24. சேரமான் கணுக்காலிரும்பொறைக்கும், சோழன் செங்கானனுக்கும் போர் நடைபெற்ற இடம் ______
[A] பனைமலை [B] கழுமலம்
[C] மதுரை [D] கலிங்கம்

25. பொருத்துக :
[A] பொன்வண்ணத்தந்தாதி - சேக்கிழார்
[B] கோயில் நான்மணிமாலை - பேயாழ்வார்
[C] பெரியபுராணம் - பட்டினத்தடிகள்
[D] மூன்றாம் திருவந்தாதி - பெருமாள்நாயனார்
[A] 4 3 2 1 [B] 4 2 3 1
[C] 2 3 4 1 [D] 4 3 1 2

26. ஆடி மாதம், பூச நட்சத்திரம், பூமகள் அம்சம் பொருந்திய ஆழ்வார் யார் ?
[A] பெரியாழ்வார் [B] ஆண்டாள்
[C] பூதத்தாழ்வார் [D] பேயாழ்வார்

27. ஆழ்வார்களில் இடம்பெற்ற ஒரே சேர அரசன் யார் ?
[A] திருமங்கையாழ்வார் [B] பெரியாழ்வார்
[C] பெரியாழ்வார் [D] குலசேகராழ்வார்

28. நம்மாழ்வார் பாடிய பாசுரங்களில் தவறானது எது ?
I. திருவிருத்தம் 100 பாசுரங்கள் - ரிக் வேதம்
II. நரிவிருத்தம் 87 பாசுரங்கள் - யசூர் வேதம்
III. திருவாசிரியம் 7 பாசுரங்கள் - சாம வேதம்
IV. திருவாய்மொழி 1000 பாசுரங்கள் - அதர்வணவேதம்
[A] I [B] II
[C] III [D] IV

29. நம்மாழ்வாரைக் குருவாகக் கொண்டதோடு, அவரைத் தெய்வமாகவும் வழிபட்டவர், "கருடாழ்வாரின் வம்சம்"
[A] ஆண்டாள் [B] குலசேகராழ்வார்
[C] திருமிழிசையாழ்வார் [D] மதுரகவியாழ்வார்

30. கண்ணனை குழந்தையாகப் பாவித்து பிள்ளைத்தமிழுக்கு வழிகாட்டியாக விளங்கியவர் "பெரியாழ்வார்" எத்தனைப் பாடல்கள் கண்ணனைப் பற்றி பாடியுள்ளார் ?
[A] 100 [B] 200
[C] 300 [D] 400

31. பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது
[A] ஊன் [B] அடிசில்
[C] அயினி [D] பொம்மல்

32. பொருத்துக :
[A] அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் (1) நாலடியார்
[B] கொளக் கொளக் கூழுடை (2) மலைபடுகடாம்
[C] உப்பிலிப் புழுக்கல் (3) புறநானூறு
[D] இறடிப் பொம்மல் பெறுகுவீர் (4) சீவகசிந்தாமணி
[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 2 1 [D] 1 2 3 4

ARIVU TRUST

33. "புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்" எவ்வகை அணி
[A] உவமையணி
[B] எடுத்துக்காட்டு உவமையணி
[C] வேற்றுமையணி
[D] வஞ்சப்புகழ்ச்சி அணி

34. பொருத்துக :

| | |
|---|---|
| [A] இன்சொல் | (1) விளைநிலம் |
| [B] ஈதல் | (2) உரம் (எரு) |
| [C] வாய்மை | (3) விதை |
| [D] அறம் | (4) கதிர் |

[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 2 1 [D] 1 2 3 4

35. "ஆமை வடைக்காய் அரைஞான் பணயம் சீடைக் காகச் சிலேட்டு பணயம்"-வரி இடம்பெற்ற நூல்
[A] கம்பராமாயணம்
[B] சிலேடை
[C] பாரதிதாசன் கவிதைகள்
[D] மருமக்கள்வழி மான்மியம்

36. உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே இவ்வரி இடம்பெற்ற பருவம் ____________
[A] செங்கீரை [B] தால்
[C] அம்புலி [D] வருகை

37. பின்வருவனவற்றுள் எது / எவை சரி
[i] இலக்கியச்சுவைகளில் மிகவும் நுட்பமானதுநகைச்சுவை
[ii] எள்ளல், இளமை, அறியாமை, மடமை, ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் - தொல்காப்பியர்
[iii] கூத்துகளில் கோமாளிகளும், அரசவைகளில் விகடகவிகளும் நகைச்சுவைக்காகபடைக்கப்பட்டவர்கள்
[iv] நகைச்சுவையுணர்வு இல்லாதவர்களுக்குப் பகலும் இருளாகத் தோன்றும் - வள்ளுவர்
[A] i, ii சரி [B] iii, iv சரி
[C] i, iii சரி [D] i, iv சரி

38. கோடிட்ட இடத்தை நிரப்புக ____________
I. வான் பெற்ற நதி ____________
II. துழாய் அலங்கல் என்பதன் பொருள் ____________
III. பகழி என்பதன் பொருள் ____________
IV. காசுக்குப் பாடுபவன் ____________ அல்லன்
[A] யமுனை, மணமாலை, கடல், புலவன்
[B] காவிரி, மாலை, ஆழி, ஓவியன்
[C] பெண்ணை, கடிமாலை, வில், கவிஞன்
[D] கங்கை, துளசி மாலை, அம்பு, கவிஞன்

39. பாடும் பாடல் - இத்தொடரில் பாடல் என்பது ____________
[A] நிலைமொழி [B] வருமொழி
[C] தனிமொழி [D] பொதுமொழி

40. "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" சொற்பொழிவாற்றி தமிழன்னைக்கு சிறப்பு செய்தவர்
[A] முடியரசன் [B] பாரதிதாசன்
[C] தேவநேயப்பாவாணர் [D] சுப்புரத்தினதாசன்

41. பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது
[I] கட்டு + சோறு = கட்டுச்சோறு - தோன்றல்விகாரம்
[II] கண் + மலர் = கண்மலர் - இயல்பு விகாரம்
[III] வளம் + நூல் = வளநூல் - கெடுதல் விகாரம்
[IV] முள் + செடி = முட்செடி - திரிதல் விகாரம்
[A] I [B] II
[C] IV [D] எதுவுமில்லை

42. "மூன்றடி முன்னோக்கிச் செல்வதற்கு ஆறடித் தொலைவு பின்னோக்கி செல்ல வேண்டுமா" ? போர் முனையில் பின்வாங்கக் கூடாதல்லவா ? ____________
[A] மகாத்மாகாந்தி
[B] ஜவஹர்லால்நேரு
[C] முடியரசன்
[D] வ.சுப.மாணிக்கம்

43. பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாதது
[A] சுழன்றும் ஏர்பின்னது உலகம் .... - திருக்குறள்
[B] செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுவள்ளுவம்
[C] மாதர் முகம்போல் ஒளிவிட ... - திருவள்ளுவர்
[D] வலவன் ஏவா வானூர்தி .......... - புறநானூறு

44. வள்ளலார் மனம் பதைத்ததற்கான காரணம் யாது ?
[A] நீரின்றி வாடிய பயிரைக் கண்டபோது
[B] உணவின்றி உடல் மெலிந்த வறியோரைக் கண்டு
[C] உடலும் உள்ளமும் நைந்த ஏழைகளைக் கண்டு
[D] தீராத கொடிய பிணியால் இருந்தவரைக் கண்டு

45. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால் ............ .............. ....... விடுபட்டதை எடுத்தெழுதுக
[A] பகலும்பாற் பட்டன் றிருள்
[B] மக்கட்பண்(பு) இல்லா தவர்
[C] பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு
[D] கலந்தீமை யால்திரிந் தற்று

46. பொருத்துக :

| | |
|---|---|
| [A] தாயைப்போலப் பிள்ளை | (1) அறிவுரை |
| [B] ஆடிப்பட்டம் தேடி விதை | (2) நம்பிக்கை |
| [C] தை பிறந்தால் வழி பிறக்கும் | (3) உறவுமுறை |
| [D] மண் குதிரையை நம்பி ,,,,,,,, | (4) உழவு |

[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 2 1 [D] 1 2 3 4

ARIVU TRUST

**47.** தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர் ________

[A] திரு.வி.க [B] முடியரசன்
[C] பாவேந்தர் [D] சுரதா

**48.** கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் __ உருபு வரும்

[A] ஐ [B] ஆல்
[C] கு [D] இன்

**49.** பாவேந்தரின் "விழுதும் வேரும்" எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது ________

[A] பாண்டியன் பரிசு [B] அழகின் சிரிப்பு
[C] தமிழியக்கம் [D] குடும்ப விளக்கு

**50.** பின்வரும் சொற்களில் பொருத்தமற்றது

[A] தாது - மகரந்தம்
[B] போது - மலர்
[C] பொய்கை - அருவி
[D] பூகம் - பாக்குமரம்

**51.** "கனிச்சுவைமிக்க நூல்களை அள்ளிக்கற்றிடவேண்டும்"

[A] பாரதிதாசன் [B] கண்ணதாசன்
[C] வாணிதாசன் [D] சச்சிதானந்தன்

**52.** தமிழில் முதல் அகரமுதலி "சதுரகராதி" எந்த ஆண்டு வெளியிடப்பட்டது ________

[A] கி.பி 1632 [B] கி.பி 1732
[C] கி.பி 1532 [D] கி.பி 1832

**53.** பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது

[A] நிகண்டுகளில் பழமையானது - சேந்தன் திவாகரம்
[B] நிகண்டுகளில் சிறந்தது - சூடாமணி நிகண்டு
[C] தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி - அபிதான சிந்தாமணி
[D] அகராதி என்னும் சொல் இடம்பெற்றது திருமந்திரம்

**54.** 'தமிழ்வளர்ச்சிக்கழகம் வெளியிட்டவற்றுள்பொருந்தாதது

[A] குழந்தைகள் கலைக்களஞ்சியம்
[B] நாடகக் கலைக்களஞ்சியம்
[C] இசுலாமிய கலைக்களஞ்சியம்
[D] அறிவியல் சார்ந்த கலைக்களஞ்சியம்

**55.** திரு.வி.கவால் 'இக்கால ஔவையார்' என்று பாராட்டப் பெற்ற அசலாம்பிகை எத்துறையில் வல்லவர்

[A] சிறந்த எழுத்தாளர்
[B] சிறந்த இலக்கியவாதி
[C] சிறந்த பத்திரிக்கையாளர்
[D] சிறந்த பேச்சாளர்

**56.** ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி ________

[A] வேலு நாச்சியார் [B] அஞ்சலையம்மாள்
[C] அம்புஜத்தம்மாள் [D] இராமாமிர்தம்

**57.** வெப்பத் தடுகளத்து வேழங்கள் ஆயிரமும் கொப்பத் தொருகளிற்றால் கொண்டோனும் - நூலைத் தேர்க

[A] விக்கிரமசோழன் உலா
[B] இரண்டாம் குலோத்துங்கன் உலா
[C] இரண்டாம் இராசராசன் உலா
[D] முதலாம் இராசராசன் உலா

**58.** மலரின் எழுவகைப் பருவங்களை வரிசைப்படுத்துக

I. மலர் II.அரும்பு III. மொட்டு IV. முகை
V. செம்மல் VI. வீ VII. அலர்

[A] II,III,IV,I,V,VI,VII [B] II,I,IV,III,V,VII,VI
[C] II,III,IV,I,VII,VI,V [D] I,II,III,IV,V,VI,VII

**59.** **Green Proof** - சரியான தமிழ்ச்சொல்லைத் தேர்க

[A] திருத்தப்படாத அச்சுப்படி
[B] செய்தித்தாள் வடிவமைப்பு
[C] சிறப்புச்செய்தி இதழ்
[D] தலையங்கம்

**60.** நோய் முதலான காரணங்களால் உடம்பு அழியுமாயின் உயிரும் அழியும் அவ்வாறு அழிந்தால் உறுதிதரும் மெய்யறிவை அடையமுடியாது என்று கூறியவர்

[A] திருமூலர் [B] மங்கம்மாள்
[C] இளந்திருமாறன் [D] பாரதிதாசன்

**61.** பின்வருவனவற்றுள் தவறான ஒன்றைத் தேர்க

[A] நாடகம் உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி
[B] நாடகம் வேறு பெயர்'ஒயிலாட்டம்'அழைக்கப்படுகிறது
[C] தொல்காப்பியம் நாடகங்களுக்குஇலக்கணம்கூறுகிறது
[D] "கூத்தாட்டவைக்குழாத் தற்றே" - வள்ளுவம்

**62.** சொற்றொடரில் அமைத்து எழுதுக

[A] நாடகம், தமிழின் தொன்மையான கலை வடிவம்
[B] நாடகம், தொன்மையான தமிழின் கலை வடிவம்
[C] தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம்
[D] தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம்

**63.** சுவாமி விபுலானந்தர் எழுதிய மதங்க சூளாமணியும் மறைமலையடிகள் எழுதிய சாகுந்தலமும் நாடகத்தைப்பற்றிய ________

[A] நாடக மூல நூல் [B] ஆராய்ச்சிநூல்
[C] வரலாற்று நூல் [D] நாடக இலக்கணம்

ARIVU TRUST

**64.** கூற்று : [A] ஒரு கதையைத்தழுவி வேடம் புனைந்து ஆடுவது நாடகம்.
காரணம் : [R] தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதை நாட்டியம் என்பர்.
[A] [A] சரி [A] க்கு [R] சரியான விளக்கம்
[B] [A] சரி [R] சரி [A]க்கு [R] சரியான விளக்கமல்ல
[C] [A] சரி [R] சரி
[D] [A] தவறு [R] சரி

**65.** விடுதலைப்போராட்டக் காலத்தில் தோன்றிய நாடகம்
[A] கதரின் வெற்றி
[B] தேசபக்தி
[C] தேசியக்கொடி
[D] அனைத்தும்

**66.** "வெற்றிலை நட்டான்" எவ்வகை இலக்கணம்
[A] பொருட்பெயர்
[B] சினைப்பெயர்
[C] தொழிற்பெயர்
[D] ஆகுபெயர்

**67.** புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் - நூலைத் தேர்க
[A] புறநானூறு
[B] அகநானூறு
[C] திருக்குறள்
[D] தொல்காப்பியம்

**68.** அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை என்னும் வழக்கு. "ஆன்ற" பொருள் தருக
[A] மேன்மை
[B] உயர்ந்த
[C] தாழ்ந்த
[D] அளவற்ற

**69.** பின்வருவனவற்றுள் "பெருங்கதை" கூறுவது
[A] வான்வழி பயணங்களும், குறிப்புகளும்
[B] இராவணன் செலுத்திய புட்பக விமானம்
[C] வானூர்தி வடிவம், இயக்கும் முறைகள்
[D] ஓட்டுனர் இல்லா வானவூர்தி

**70.** உலக முதன்மொழி தமிழ். இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்: என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவிய தமிழ்ப்பெருங்காவலர்
[A] ந.பிச்சமூர்த்தி
[B] திரு.வி.க
[C] கண்ணதாசன்
[D] பாவாணர்

**71.** பொருத்துக :
1. மதி, (புந்தி) - அறிவு
2. உதயம் - கடல்
3. சலதி - கதிரவன்
4. புவனம் - உலகம்

[A] 4 3 2 1
[B] 2 1 3 4
[C] 1 3 2 4
[D] 1 3 4 2

**72.** பின்வருவனவற்றுள் பொருந்தாத ஒன்றைத் தேர்க
[A] பம்மல் சம்மந்தம்
[B] ஔவைசண்முகம்
[C] சங்கரதாசுசுவாமிகள்
[D] பரிதிமாற்கலைஞர்

**73.** பேச்சு வழக்கில் பொருந்தாத ஒன்று :
[A] நாட்கள்
[B] சுவரில்
[C] மனதில்
[D] சிலவு

**74.** பின்வரும் இலக்கணத்தில் பொருத்தமற்றது
[A] மற்றுப்பிற என்னும் தொடரில் "மற்று"-பெயர்ச்சொல்
[B] சாலப்பசித்தது என்பது - உரிச்சொல்
[C] கூடிப் பேசினர் என்னும் தொடர் -பெயரெச்சத்தொடர்
[D] கண்ணா வா ! என்பது - விளித்தொடர்

**75.** பிரித்தால் பொருள் தராது, விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வருவது
[A] அடுக்குத்தொடர்
[B] பொருளாகுபெயர்
[C] உணர்ச்சி வாக்கியம்
[D] இரட்டைக்கிளவி

**76.** "பவளவாய் பேசினாள்" - எவ்வகை இலக்கணம்
[A] வினைத்தொகை
[B] உவமைத்தொகை
[C] அன்மொழித்தொகை
[D] உம்மைத்தொகை

**77.** "தாய்மையன் பிறனை யீன்றபா ரதத்தாய் <u>தாள்மலர்</u> பணிவதே தவமாம்" - இலக்கணம் தருக
[A] உவமைத்தொகை
[B] சினைப்பெயர்
[C] எண்ணும்மை
[D] உருவகம்

**78.** பறந்தது வண்டா, பழமா ? இஃது என்ன விந்தையாக இருக்கிறதே ! வரி இடம்பெற்ற நூலைத் தேர்க
[A] சீவகசிந்தாமணி
[B] மனம் நுகர்ந்த வண்டு
[C] விவேகசிந்தாமணி
[D] பாரதத்தாய்

**79.** "விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல்" வரி இடம்பெற்ற நூல்
[A] யார் கவிஞன்
[B] குடும்ப விளக்கு
[C] பாரதத்தாய்
[D] அழகின் சிரிப்பு

**80.** தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பணையளவு காட்டும் படித்தால் - இவ்வரியை எழுதியவர்
[A] ஔவையார்
[B] கம்பர்
[C] கபிலர்
[D] தாமதத்தர்

**81.** கற்பவை கற்கும்படி வள்ளுவர் சொன்னபடி கற்கத்தான் வேண்டும் அப்படிக் கல்லாதவர் வாழ்வதெப்படி !
[A] முடியரசன்
[B] பாரதியார்
[C] பாவாணர்
[D] பாரதிதாசன்

ARIVU TRUST

**82.** வேலுநாச்சியார் பெற்றோரைத் தேர்க
[A] முத்து வடுகநாதர் - மீனாட்சி
[B] முத்து வீரப்பன் - சின்ன முத்தம்மாள்
[C] செல்லமுத்து - சக்கந்தி முத்தாத்தாள்
[D] சொக்கநாதன் - மங்கம்மாள்

**83.** பின்வருவனவற்றை சரியாக ஏரு வரிசையில் எழுதுக
I. அம்புலி II.வருகை III. சப்பாணி IV.முத்தம் V.தால் VI.செங்கீரை VII.காப்பு
[A] II,III,IV, V,VI,VII, I
[B] II,I,IV,III,V,VII,VI
[C] II,III,IV,I,VII,VI,V
[D] VII,VI,V,III,IV,II,I

**84.** அகரவரிசையில் அமைத்து எழுதுக
[A] பாடம்,பட்டம்,மாந்தளிர்,மன்றம், மென்மை,மேன்மை
[B] மன்றம்,மாந்தளிர்,மென்மை,மேன்மை, பட்டம்,பாடம்
[C] பட்டம்,பாடம்,மன்றம்,மாந்தளிர், மென்மை,மேன்மை
[D] மென்மை,மேன்மை,பட்டம்,பாடம், மன்றம்,மாந்தளிர்

**85.** தென் தமிழ்நாட்டில் "பழம்பதி" என்றுஅழைக்கப்படுவது
[A] அகஸ்தியர்மலை [B] திருக்குற்றாலம்
[C] கொடுமுடி [D] மேகமலை

**86.** "முதல் செயல்திட்ட வரைவாளர்" போற்றப்படுபவர்
[A] சார்லஸ் பாப்பேஜ் [B] ஹெவார்டுஜக்கன்
[C] ஜான் பாஸ்டல் [D] லேடிலவ்லேஸ்

**87.** நளவெண்பாவில் அமைந்துள்ள வெண்பாக்கள் எண்ணிக்கை ________________
[A] 430 [B] 4350
[C] 431 [D] 5618

**88.** பின்வருவனவற்றில் எது / எவை சரியாக உள்ளது (புகழேந்திப்புலவர்)
I. பிறப்பு - திருமுனைப்பாடி நாடு பொன்விளைந்த களத்தூர், (காஞ்சிபுரம் (ம) பெருங்களத்தூர்)
II. சிறப்பு - வரகுண பாண்டியனின் அவைப்புலவர்
III. காலம் - பன்னிரண்டாம் நூற்றாண்டு, (கம்பரும் - ஒட்டக்கூத்தரும் இவர்காலத்தில் வாழ்ந்தவர்கள்
IV. வெண்பாயாப்பில் காப்பியப்பொருளைத் தொடர் நிலைச் செய்யுள்காளாய்ப் பாடிய சிறப்பினால் "வெண்பாவிற்கு" புகழேந்தி எனப் போற்றப்படுகிறார்
[A] I தவறு II, III, IV சரி
[B] I சரி II, III, IV தவறு
[C] I II III மற்றும் IV சரி
[D] I, II, III சரி IV தவறு

**89.** "கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித் தேன்கழியில்" பூத்த மலர்கள் எது ?
[A] குறிஞ்சி பூ [B] முல்லை பூ
[C] மருதம் பூ [D] நெய்தல் பூ

**90.** "நெடுந்தொலைவிலுள்ள பெரிய பனைமரத்தின் உருவத்தைப் புல் நுனியில் தேங்கிய சிறுபனித்துளி மிகத்தெளிவாகக் காட்டும்" யாருடைய சிந்தனையில்
[A] திருவள்ளுவர் [B] கலீலியோகலிலி
[C] கபிலர் [D] கம்பர்

**91.** "கருப்பாயி சாறு கொண்டு வா" - என்று நீலாம்பிகையை அழைத்தவர் யார் ?
[A] மறைமலையடிகள்
[B] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
[C] பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்
[D] கவியரசன் முடியரசன்

**92.** தேம்பாவணி, காவலூர் கலம்பகம் ____________ காட்சி அளிக்கிறது, தொன்னூல் ___________ இலங்குகிறது, சதுரகராதி _____________ மிளிர்கிறது, வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகிறார் என ரா.பி சேதுப்பிள்ளை புகழ்கிறார் விடுபட்ட சொல்லை நிரப்புக
[A] கதம்பமாலை, முத்தாரமாக, பொன்னூலாக
[B] பொன்நூலாக, கதம்பமாலை, முத்தாராமாக
[C] முத்தாரமாக, கதம்பமாலை, பொன்நூலாகா
[D] கதம்பமாலையாக, பொன்நூலாக, முத்தாராமாக

**93.** "நாங்கள் கவிராசர்கள்" என்று செருக்குடன் கூடிய புலவர்களின் செருக்கை அடக்கியவர் யார் ?
[A] பாரதிதாசன் [B] கம்பர்
[C] காளமேகப்புலவர் [D] கபிலர்

**94.** 1964 - ஆம் ஆண்டு தாமரைத்திரு (பத்மஸ்ரீ) விருது யாருக்கு வழங்கப்பட்டது
[A] அஞ்சலையம்மாள்
[B] அம்புஜத்தாம்மாள்
[C] அசலாம்பிகை
[D] காந்திமதியம்மாள்

**95.** "நகைசெய் தன்மையி னம்பெழீ இத் தாய்த்துகள்" தேம்பாவணியில் எப்படலத்தில் இடம்பெற்றுள்ளது
[A] வாஞ்சைப்பத்து
[B] மருவப்பத்து
[C] தொண்டிபத்து
[D] மகவருள்

ARIVU TRUST

**96.** இந்திய சீனப் போரின் போது போர் நடைபெற்ற இடத்திற்கு சென்று செய்தியைத் திரட்டிய இதழ்

[A] லண்டன் டைம்ஸ்
[B] இன்டியன் எக்ஸ்பிரஸ்
[C] தி ஹெரால்டு
[D] டெக்கான் கிரானிக்கல்

**97.** "காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ் கண்டதோர் வையை பொருநைநதி" - தமிழக நதிகளை தமிழில் இடம்பெறச்செய்தவர் யார் ?

[A] மறைமலையடிகள் [B] பட்டினத்தடிகள்
[C] பாரதியார் [D] சுரதா

**98.** "நல்லொழுக்கம் ஒன்றே - பெண்ணே நல்ல நிலை சேர்க்கும்" - இவ்வரியில் இடம்பெற்ற விளித்தொடர்

[A] ஒழுக்கம் [B] ஒன்றே
[C] பெண்ணே [D] நல்ல

**99.** நமது இரு கண்களாகக் கருதப்படுவது யாது ? என்று பாரதியார் கூறுவது

[A] நடிப்பும், கலையும்
[B] தெய்வம், தமிழ்
[C] தேசியமும், தமிழும்
[D] நாடும், மொழியும்

**100.** பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது (ஜி.யு.போப்)

[A] **1885 to 1906** - இங்கிலாந்து பலகலைப்பணி
[B] **1886** -திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியீடு
[C] **1900** - திருவாசகம் ஆங்கில மொழிபெயர்ப்பு
[D] **1908, Feb -11** இன்னுயிர் நீத்து விடைபெற்றார்




**அடுத்த வாரம் ஒன்பதாம் வகுப்பு தமிழ் பதிவேற்றம் செய்யப்படும் ___________**

## (8th STD – TAMIL - ANSWER KEY)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 D | 2 B | 3 D | 4 D | 5 B | 6 A | 7 B | 8 B | 9 A | 10 A |
| 11 D | 12 B | 13 D | 14 D | 15 C | 16 B | 17 D | 18 B | 19 D | 20 A |
| 21 D | 22 A | 23 C | 24 B | 25 D | 26 B | 27 D | 28 B | 29 D | 30 B |
| 31 A | 32 B | 33 B | 34 A | 35 D | 36 D | 37 C | 38 D | 39 B | 40 C |
| 41 D | 42 A | 43 B | 44 B | 45 D | 46 C | 47 C | 48 B | 49 B | 50 C |
| 51 D | 52 B | 53 C | 54 D | 55 D | 56 A | 57 A | 58 C | 59 A | 60 A |
| 61 B | 62 D | 63 B | 64 C | 65 D | 66 B | 67 A | 68 B | 69 C | 70 D |
| 71 C | 72 B | 73 B | 74 C | 75 A | 76 C | 77 D | 78 C | 79 D | 80 C |
| 81 D | 82 C | 83 D | 84 C | 85 B | 86 D | 87 C | 88 A | 89 D | 90 C |
| 91 C | 92 D | 93 C | 94 B | 95 D | 96 A | 97 C | 98 C | 99 D | 100 A |

ARIVU TRUST

ARIVU TRUST